PERIYAR MANIAMMAI
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University)
Established Under Sec. 3 of UGC Act, 1956 • NAAC Accredited
think • innovate • transform

# மாணவர் நடத்தை விதிமுறைகள்

# Students Code of Conduct

*பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனத்தில் பயிலும் மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு, பாதுகாப்பான கல்வி கற்கும் சூழலை உறுதி செய்தல் ஆகியவற்றின் பொருட்டு, மாணவர்கள் பின்வரும் விதிமுறைகளைத் தவறாது உறுதியாக பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.*

All candidates admitted to various programmes of the Institute are expected to adhere to the following terms and conditions to ensure academic excellence, discipline, and a safe learning environment.

**CC1.1** ***ஒழுங்கு நடவடிக்கை:*** *பணிவின்மை, பொறுப்பின்மை மற்றும் ஒழுக்கம் தவறிய மாணவர்களைக் கண்டறியும் நிலையில், அவர்கள் மீது எந்த வித முன்னறிவிப்பின்றி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதோடு, நிறுவனத்தில் இருந்தும் வெளியேற்றப்படுவர்.*

**Disciplinary Action**: Any student found engaging in disobedient or indisciplined behaviour will be subject to strict disciplinary action, including immediate expulsion from the Institute.

**CC1.2** ***ஆடைக் கட்டுப்பாடு:*** *கல்வி நிறுவன வளாகத்தில் மாணவர்கள் தூய்மையாகவும் அடக்கமாகவும் இருக்க வேண்டியது இன்றியமையதாகும். நாகரீகமான ஆடை அணிதல் வேண்டும். மேலும் தொடர்புடைய துறையின் கால அட்டவணைப்படி வாரத்தில் மூன்று நாட்கள் தவறாமல் சீருடை அணிதல் வேண்டும்.*

**Dress Code:** Students must wear neat, modest, and appropriate attire while on campus. Uniform dress is mandatory three days a week, as per the schedule notified by the respective departments.

**CC1.3** ***வன்முறை தவிர்த்தல்:*** *மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியரல்லா பணியாளர்களிடம் சண்டையிடுதல், வாக்குவாதம் செய்தல் உடல் மொழியால் கேளிக்கை செய்தல், மோதல் போக்கை கடைபிடித்தல் ஆகிய செயல்களில் ஈடுபடக்கூடாது. தங்களுக்கு ஏற்படும் நிறைகுறைகளை உரிய வழியாக சம்மந்தப்பட்ட அலுவலருக்கு மட்டுமே தெரிவிக்க வேண்டும்.*

**Non-Violence Policy:** Students must refrain from quarrelling or engaging in any form of physical or verbal conflict with fellow students, faculty, or staff. Any grievance must be reported to the mentor or the concerned authority through appropriate channels.

CC1.4 ***மாணவர் கல்வி இடைநீக்கம்:*** *தேவையற்ற வாக்குவாதம், சண்டை, மற்றும் கைகலப்பு ஆகியவற்றில் ஈடுபடும் மாணவர்கள் உடனடியாக கால வரையறை இன்றி கல்வி நிறுவனத்திலிருந்து இடைநீக்கம் அல்லது நிரந்தர நீக்கம் செய்யப்படுவர். ஒருவேளை இடைநீக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டால் எழுத்துப்பூர்வ மன்னிப்பு கடிதத்துடன்* ***ரூபாய் 10,000 (பத்தாயிரம்) தண்டம் (அபராதம்)*** *செலுத்த வேண்டும்.*

**Suspension and Penalty for Violence:** Students found involved in any quarrel or fight will be immediately suspended indefinitely. If the act is severe, the student may be removed from the Institute's rolls. Reinstatement of suspended students, if considered, will require a written apology and payment of a penalty of Rs.10,000/-.

CC1.5 ***வருகைப்பதிவு:*** *மாணவர்கள் கல்வி நிறுவன விதிமுறையின்படி ஒவ்வொரு பருவத்திற்கும், குறைந்தபட்ச வருகைப்பதிவை பூர்த்தி செய்ய வேண்டும் வருகைப்பதிவை பூர்த்தி செய்யாத மாணவர்கள் அடுத்த பருவத்தைத் தொடர அனுமதிக்கப்பட மாட்டார்கள்.*

**Attendance Requirement:** Students must satisfy the minimum attendance requirement as per Institute regulations. Students failing to meet this requirement will not be permitted to progress to the next semester.

CC1.6 ***படிப்பில் மறுசேர்க்கை(மறுபதிவு):*** *வருகைப்பதிவு இல்லாத காரணத்தால் அடுத்த பருவத்தைத் தொடர அனுமதிக்கப்படாத மாணவர்கள். பரிந்துரைக்கப்பட்ட கல்வி மற்றும் தேர்வுக் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தி, பயின்ற அதேபருவத்தினை மீண்டும் நிறைவு செய்ய வேண்டும்.*

**Re-registration for Courses:** Students who are detained due to shortage of attendance must redo all courses of the concerned semester by paying the prescribed tuition and examination fees.

CC1.7 ***படிப்பில் இடைநிறுத்தம் (உதவித்தொகை திரும்பப் பெறல்):*** *படிப்பை இடை நிறுத்தம் செய்ய விரும்பும் மாணவர்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட உதவித்தொகைகள் அனைத்தையும் திரும்பச் செலுத்த வேண்டும் அவ்வாறு செலுத்தாத மாணவர்களின் மாற்றுச் சான்றிதழ் இன்னும் பிற சான்றுகள் எக்காரணம் கொண்டும் வழங்கப்பட மாட்டாது.*

**Discontinuation and Scholarship Refund:** Students who discontinue their studies in the middle of a course period are required to repay the full amount of any scholarship received. Transfer Certificate and other documents will be issued only upon settlement of dues, including scholarship recovery, if applicable.

**CC1.8** ***தேர்வு முறைகேடு:*** *மாணவர்கள் தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஈடுபடும் மாணவர்களின் தேர்வை ரத்து செய்தல், படிப்பு இடைநீக்கம் செய்தல் படிப்பிலிருந்து நிரந்தர நீக்கம் செய்தல் ஆகிய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

**Examination Malpractice:** Any form of malpractice in examinations is strictly prohibited and will result in disciplinary action, including cancellation of the examination, suspension, or dismissal.

**CC1.9** ***மது / போதைப்பொருள் / புகையிலை தடை:*** *மதுபானம், போதைப்பொருள், (கஞ்சா உட்பட) புகையிலை ஆகியவற்றை வளாகத்தில் வைத்திருக்க, பயன்படுத்த, விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் நிரந்தர நீக்கம் செய்யப்படுவதோடு, அவர்கள் மீது காவல்துறை மூலமாக குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.*

**Prohibition of Alcohol, Drugs, and Tobacco:** Possession, consumption, or sale of liquor, narcotic substances (including Ganja / kancha), or any similar intoxicants is strictly prohibited on campus. Such offenses will lead to criminal prosecution and immediate expulsion from the Institute.

**CC1.10** ***புகை இல்லா கல்வி நிறுவன வளாகம்:*** *பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் புகையில்லா வளாகம் ஆகும். ஆகவே புகைப்பொருட்களைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.*

**No Smoking Policy:** Smoking is strictly prohibited anywhere within the campus premises.

**CC1.11** ***பொது ஒழுக்கம்:*** *மாணவர்கள் வளாகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஒழுங்கை கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறது. நமது கல்வி நிறுவனத்தின் நற்பெயர் மற்றும் மதிப்புகளை நிலை நாட்ட வேண்டியது ஒவ்வொரு மாணவரின் தலையாய கடமையாகும்.*

**General Conduct:** Students must maintain high standards of discipline and decorum both on and off campus, upholding the reputation and values of the Institute at all times.

**CC1.12** ***பொது விதி மீறல்:*** *கல்வி நிறுவன சொத்துக்கள் வாகனங்கள் ஆகியவற்றுக்குச் சேதம் விளைவித்தல் கூடாது. அவ்வாறு சேதம் விளைவிக்கும் மாணவர்கள் மீது உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

**Other Violations:** Vandalism or damage to Institute property will be strictly dealt with, and the student will be liable for the cost of damages.

**CC1.13** ***கேலிவதை:*** *பல்கலைக்கழக நல்கை ஆணைய **(UGC)** விதிமுறைகளின் படி கேலிவதை **(Ragging)** செய்வது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.*

**Ragging** in any form is strictly prohibited as per UGC regulations and is a punishable offense.

**CC1.14** ***சமூக ஊடகங்கள்:*** *தகவல் தொடர்பு சாதனங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றினைத் தவறாகப்பயன்படுத்தி, பிறரை அவதூறு செய்வது அச்சுறுத்தலில் ஈடுபடுவது கடுமையான குற்றமாகும்.*

**Misuse of social media** or electronic communication to defame or threaten others will be treated as a serious offense.

.